கட்டிடங்களின் கட்டிடவாக்கத்திலுள்ள வீழ்ச்சிக்கு முக்கியமாக சீமெந்து, இரும்பு, உருக்கு, மரம், கண்ணாடி போன்ற கட்டிடப் பொருட்களின் விலை அதிகரிப்புகளின் ஒன்று சேர்ந்த விளைவே முதன்மை காரணமாகும். கொழும்பு மாநகர சபைப் பகுதியில் கட்டிடம் அமைக்கக் கூடிய காணிகளின் பற்றுக்குறை மிதமிஞ்சிய காணி விலைகள் போன்றனவும் இந்த நிலைமைக்கு முக்கிய பங்களித்தன. எனவே, கைத்தொழில், குடியிருப்பு நோக்கங்களிற்கான புதிய கட்டிடங்களின் நியதிகளில் கட்டவாக்க நடவடிக்கைகளின் அமைவிடம் கொழும்பு மாநகர சபைப் பகுதியிலிருந்து உப நகர்ப்புறங்களுக்கு மாற்றப்பட்டமை தவிர்க்கமுடியாமல் இருந்தது. புதிய கட்டடங்களின் வளர்ச்சி வீதங்கள் குறைந்த வேளையில் மேலதிக இணைப்புக்கள், மாற்றல்கள் ஆகியவற்றின் வளர்ச்சி வீதங்கள் கொழும்பு மாநகர சபைப் பகுதியில் 1981இல் அதிகரித்ததுடன் காணிப்பாவிப்பைச் சிக்கனப்படுத்துதல், தற்போதுள்ள வசதிகளை முன்னேற்றல் போன்ற போக்குகளைப் பிரதிபலித்தது எனினும், 1981 இல் தனியார் துறையால் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு, கட்டிடவாக்க நடவடிக்கைகள் கடந்த இரு ஆண்டுகளில் இத்துறையில் நிலவிய உயர்ந்தமட்ட நடவடிக்கை மட்டத்திலிருந்தும் விலகியதை எடுத்துக்காட்டின.

தொழில் நிலை

1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் முக்கிய நோக்கங்களில் ஒன்று பல ஆண்டுகளாக ஏற்பட்ட வேலையில்லாப் பிரச்சினையில் ஒரு முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். முதலீடு உற்பத்தி சார்ந்த வழிமுறைகளுக்குத் தேவையான மூலவளங்களை உருவாக்குவதற்குத் தேவைப்படும் நுகர்வோர் உதவுதொகைகளைப் படிப்படியாக ஒழுங்குபடுத்துவதும் குறைப்பதும் அவசியமானதுடன் இலங்கைபோன்ற வறிய ஒரு நாட்டில் மக்களின் வாழ்க்கைச் செலவு தொடர்பாக இத்தகைய கொள்கைகள் போன்ற மிகத் தாக்கம் மிக்க நடவடிக்கைகளைப் புதிய உற்பத்தி, தொழில் நிலைவாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமே மேற்கொள்ளமுடியும். இந்த நிலையிலிருந்து நோக்கும் போது 1977 இன் பொருளாதாரக் கொள்கைகள் புதியதும் வருமானமுள்ளதுமான தொழில்களை பல துறைகளிலும் உருவாக்கியதன் மூலம் ஒரு முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தோன்றியது.

1978-81 ஆண்டுக்குட்பட்ட நான்கு ஆண்டு காலப்பகுதியில் நன்கமைந்த துறையில் உருவாக்கப்பட்ட, நம்பத்தகும் தரவுகள் கிடைக்கக்கூடிய புதிய தொழில் வாய்ப்புக்களின் மொத்த எண்ணிக்கை 318847 ஆகும். ஆண்டு தோறும் தொழிற்சந்தையினுள் புகும் மதிப்பீடுசெய்யப்பட்ட 125,000 பேர்களுடன், வேலைவாய்ப்புக்களை; வேலையின்மையின் போக்கில் ஏற்படும் வீழ்ச்சியினை நிலையாகப்பேணுவதற்கு அடுத்த சில ஆண்டுகளில் மேலும் விரைவாக அதிகரிக்க வேண்டும். எனினும் கிடைக்கக்கூடிய தரவுகள், நல்லமுறையில் அமைக்கப்பட்ட துறைகளைப் பொறுத்தளவில் புதிய தொழில் வாய்ப்புக்கள் 1980 ஐப் பார்க்கிலும் உயர்ந்திருந்தும் புதிய பொருளாதாரக் கொள்கைகளின் முதலிரண்டு ஆண்டுகளில் அடைந்த தொகையைவிட மிகவும் குறைந்திருந்திருப்பதைக் காட்டுகின்றது.

1981 இல் அரச திணைக்களங்கள், அரசுசார் நிறுவனங்கள் (அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள்) நன்கமைந்த தனியார்துறை (ஊழியர் சேமநிதியத்திற்கு உதவு தொகை செலுத்தும் தனியார் நிறுவனங்கள்) ஆகியவற்றில் தொழில்நிலை 40,622 ஆல் அதிகரித்துள்ளது. 1979, 1980 இன் தொடர்பான இவ்வெண்ணிக்கை முறையே 115,000, ஆகவும் 18,035 ஆகவும் இருந்தன. புதிய தொழில்நிலைக்கானமதிப்பீடுகள் பொருளாதாரத்தின் நன்கமையாத துறைகளில் முக்கியமாக மரபுவழி வேளாண்மை, கட்டடவாக்கம் மற்றும் சுயதொழில்களை உள்ளடக்கவில்லை. இவற்றில் புதிய கொள்கைகளின் தாக்கம் கணிசமானளவு உணரப்பட்டிருக்கும், இத்துறைகளுக்கான தரவுகள் குடிமதிப்பு ஆண்டுகளுக்கும் மாதிரி அளவைகள் நடத்தப்படும் ஆண்டுகளிற்கும் மாத்திரமே கிடைக்கக்கூடியன.

மத்திய வங்கியால் நடத்தப்பட்ட தொழில் நிலையின் ஆண்டு அளவீடு அரச திணைக்களங்களில் தொழில்நிலை 5389 அல்லது 1.1 சதவீத மதிப்பிடப்பட்ட அதிகரிப்பைக் காட்டியது. அரசு சார்ந்த நிறுவனங்களில் தொழில் நிலை 1981 இல் 9,077 அல்லது 1.2 சதவீதத்தால் அதிகரித்தது. ஊழியர் சேமநிதியத்திடமிருந்து தனியார் துறையிலுள்ள மாதிரி நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்ட தற்காலிகத் தரவுகள் நன்கமைந்த தனியார் துறையில் குறிப்பிட்டதொரு அதிகரிப்பு 26,156 அல்லது 2 சதவீதத்தை 1980 இன் 3,030 கொண்ட அதிகரிப்பிற்கு எதிராக காட்டுகின்றது.

பொருளாதாரம் அமைப்பு மாற்றங்களுக்கு உட்படும் காலப்பகுதியில் தொழில் நிலை மட்டத்தின் அளவீடுகளாக மரபுவழி குறிகாட்டிகள் இருப்பது போதாமையை அதிகரித்தளவில் காட்டுகின்றது. நன்கமைந்த துறையின் தாக்கத்தை உண்டாக்கும் தொழில்நிலை, (அரசுஉட்பட) கடந்த ஆண்டு அரச செலவினங்களில் ஏற்படுத்தப்பட்ட நிதியீட்டு எல்லைகள் வங்கிக் கொடுகடன் விரிவாக்கத்தை குறைப்பதற்கு எடுத்த முயற்சி புதிய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்காமை என்பனவற்றால் பாதிப்படைந்தது. பல அரச கூட்டுத்தாபனங்கள் மாறும் சூழலுக்கு ஏற்ப கொள்கை, மறுசீராக்கத்தின் ஒரு பகுதியாகவும் செயலாற்றல் திறனை அதிகரிக்கவும் பல ஆள் குறைப்புத் திட்டங்களினால் அலுவலர்களை குறைத்துள்ளன. இதற்கு மாறாக தனியார் துறையில் வேலை வாய்ப்புக்கள் மிகவும் அதிகரித்தன. நன்கமையாத துறைகளில் தொழில்நிலை அபிவிருத்தியின் மீதான புள்ளிவிபரங்கள் கிடைக்கக்கூடியனவாகவில்லை. மேலும் நன்கமையாத துறை தனித்து, 1981 இல் உண்மை கூலிகளில் அதிகரிப்பை நன்கமைந்த துறையின் தொழில் பெறுநர் பிரிவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக காட்டுவதுடன் இத்துறையில் கிடைக்கக்கூடிய தொழில் வழங்கல்களுக்கு இருந்திருக்கும் மிக அதிகளவு கேள்வியையும் காட்டுகின்றது. வேலை தேடும் நிலையில் இருக்கும் 125,000 பேருக்கும் ஒரு ஆண்டு சம்பள உயர்வை வழங்கும் பட்சத்தில் வேலை உருவாக்கத்திற்கான ஆற்றலானது நன்கமைந்த அமைவாக தனியார் துறைகளில் இதற்கு முன்பிருந்ததைவிட அதிகமாக இருப்பதை அண்மைக்கால அபிவிருத்திகள் எடுத்துக்காட்டுகின்றன.

**விலைகள்**

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிக்கப்பட்டவாறு பொதுவான விலை மட்டத்தில் அதிகரிப்பு வீதமானது 1981 இல் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. 1980 இன் 26சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் சுட்டெண் 1981 இல் 18 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. புள்ளிக்குப்புள்ளி அடிப்படையிலும்